RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 128 | மே.14, 2025 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## “இது ஓர் எச்சரிக்கை மணி!” பொள்ளாச்சி பாலியல் வழக்கின் தீர்ப்புக்கு தினகரன் வரவேற்பு

சென்னை: மே.14-

“பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கின் தீர்ப்பை வரவேற்கும் அதே நேரத்தில், அதற்கு இணையாக தமிழகத்தில் அடிக்கடி அரங்கேறும் சிறுமிகள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைச் சம்பவங்களை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டிய பொறுப்பு தமிழக அரசுக்கு இருப்பதை இனியாவது உணரவேண்டும் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்,” என்று அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் கூறியுள்ளார்.



இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் தளப்பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், “பொள்ளாச்சியில் பெண்களை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கிய குற்றவாளிகளுக்கு சாகும்வரை ஆயுள் தண்டனை விதித்து கோவை மாவட்ட மகளிர் நீதிமன்றம் வழங்கியிருக்கும் தீர்ப்பு மிகுந்த வரவேற்புக்குரியது. நாம் அனைவராலும் போற்றி வணங்கப்பட வேண்டிய பெண்களிடம் ஈவு இரக்கமின்றி மிகக் கொடூரமான முறையில் நடந்து கொண்ட மிருகக் குணம் படைத்தவர்களுக்கு கோவை மகளிர் நீதிமன்றம் வழங்கியிருக்கும் இந்த தீர்ப்பு, பெண்களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபட முயற்சிக்கும் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டிருக்கும் எச்சரிக்கை மணி.

பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கின் தீர்ப்பை வரவேற்கும் அதே நேரத்தில், அதற்கு இணையாக தமிழகத்தில் அடிக்கடி அரங்கேறும் சிறுமிகள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைச் சம்பவங்களை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டிய பொறுப்பு தமிழக அரசுக்கு இருப்பதை இனியாவது உணரவேண்டும் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்” என்று அவர் கூறியுள்ளார்.




## ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி மருத்துவமனையில் நடமாடும் மருத்துவ சேவை சக்தி அம்மா தலைமையில் அறிமுகம்

### மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் பங்கேற்று இச்சேவையை தொடங்கி வைப்பு

வேலூர் மே.14

வேலூர் மாவட்டம், திருமலைக்கோடி, ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தில் இலவச நடமாடும் மருத்துவ சேவை வாகனத்தை, ஸ்ரீ சக்தி அம்மா மற்றும் சிறப்பு அழைப்பாளராக மத்திய தகவல் ஒளிபரப்புத் துறை இணை அமைச்சர் எல்.முருகன் ஆகியோர் தொடங்கி வைத்தனர். ஸ்ரீ நாராயணி மருத்துவமனை இயக்குனர் என்.பாலாஜி, பொற்கோயில் இயக்குனர் சுரேஷ்பாபு மற்றும் மருத்துவமனை, பொற்கோயில் அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

வேலூர் ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்துடன் தமிழ்நாடு சேவாபாரதி அமைப்பு மற்றும் விஸ்டார் நிதி சேவைகள் நிறுவனம் இணைந்து ஸ்ரீசக்தி அம்மா ஆசியுடன் பொதுமக்களுக்கு இலவச மருத்துவ சேவையை தேடிச் சென்று அளிக்கும் நடமாடும் மருத்துவ சேவையை தொடங்கி வைத்தனர். இதன் தொடக்க விழா 11.05.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் நடைபெற்றது. இவ்விழாவில்

ஸ்ரீ சக்தி அம்மா முன்னிலையில்

சிறப்பு விருந்தினராக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் எல்.முருகன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி, நடமாடும் மருத்துவ சேவை வாகனத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கவுரவ விருந்தினர்களாக ஸ்ரீநாராயணி குழும நிறுவனங்களின் இயக்குனர் மற்றும் அறங்காவலர் என்.பாலாஜி, பொற்கோயில் இயக்குனர் சுரேஷ் பாபு, விஸ்டார் நிதி சேவைகள், தென்கிழக்கு போர்ட்ஃபோலியோ தலைவர் ஸ்ரீ. சந்தோஷ் குமார் ராமதாஸ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி சிறப்பித்தனர்.

இவ்விழாவில் சமர்பக சேவா அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் ராஜண்ணா, ஆர்.எஸ்.எஸ். வேலூர் மண்டலத் தலைவர் ஜெகதீசன் மற்றும் சேவாபாரதி தமிழ்நாடு துணைத் தலைவர் விவேகானந்தன் ஆகியோர் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர். இந்நிகழ்வின்போது ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி பொற்கோயில் குழுமம் மற்றும் மருத்துவமனை குழுமம் அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர். இந்த மகத்தான சேவை ஏழை எளிய நடுத்தர மக்கள் பெரிதும் பயன்படும் வகையில் இருப்பதால், இச்சேவை பொதுமக்களிடையே பெரும் வரவேற்போம் மகிழ்ச்சி அளிக்கும் வகையில் இருப்பதாக பொதுமக்கள் மற்றும் சமூக அலுவலர்கள் இச்சேவை குறித்து சக்திஅம்மா குழும நிறுவனத்திற்கு பாராட்டுகளை தெரிவித்து வருகின்றனர்.

## ரூ.60,000 லஞ்சம் வாங்கிய கல்வி அலுவலக கண்காணிப்பாளர் கைது : தென்காசி

தென்காசி: மே.14-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் பகுதியைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் திருவேங்கடம் வட்டம், செவல்குளத்தில் உள்ள செயின்ட் பவுல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் பணிபுரிந்து வந்தார். அவர், அந்த பள்ளியில் பணிபுரிந்த காலங்களுக்கு பணி அனுபவ சான்று கேட்டு பள்ளி தாளாளரிடம் விண்ணப்பித்துள்ளார்.

அதன்படி, பணி அனுபவ சான்றை தயார் செய்த பள்ளி தாளாளர் நாகராஜ் (46) என்பவர், அதில் மேலொப்பம் பெற்று, அலுவலக நடைமுறைகளை முடித்து தருவதற்காக தென்காசி மாவட்ட கல்வி அலுவலகத்தில் (தனியார் பள்ளி) சமர்ப்பித்துள்ளார்.

இது தொடர்பாக தென்காசி மாவட்ட கல்வி அலுவலக கண்காணிப்பாளர் சுரேஷ் குமாரை சந்தித்து பேசியபோது, அவர் ஆசிரியரின் பணி அனுபவ சான்றை மேலொப்பம் பெற்று அலுவலக நடைமுறைகளை முடித்து வழங்குவதற்கு ரூ.60 ஆயிரம் லஞ்சம் கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத பள்ளி தாளாளர், இது குறித்து தென்காசி லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் அளித்துள்ளார்.

இதையடுத்து, போலீஸாரின் அறிவுரைப்படி ரசாயனம் தடவிய பணம் 60 ஆயிரம் ரூபாயை அலுவலக கண்காணிப்பாளர் சுரேஷ் குமாரிடம் பள்ளி தாளாளர் நாகராஜ் கொடுத்தார். லஞ்ச பணத்தை சுரேஷ் குமார் பெற்றுக் கொண்டதை அறிந்த தென்காசி லஞ்ச ஒழிப்புத் துறை டிஎஸ்பி பால் சுதர், காவல் ஆய்வாளர் ஜெய ஸ்ரீ மற்றும் போலீஸார், விரைந்து சென்று சுரேஷ் குமாரை கைது செய்தனர்.

# பொள்ளாச்சி பாலியல் வழக்கு குற்றவாளிகள் 9 பேருக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை விதிப்பு

கோவை: மே.14-

பொள்ளாச்சி பாலியல் வழக்கில் குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்ட 9 பேருக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை விதித்து கோவை மகளிர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. மேலும், பாதிக்கப்பட்ட 8 பெண்களுக்கும் ஒட்டுமொத்தமாக ரூ.85 லட்சம் இழப்பீடு வழங்கவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.



இந்நிலையில், குற்றவாளிகள் 30 நாட்களுக்குள் மேல் முறையீட்டுக்குச் செல்லும் வாய்ப்பு அவர்களுக்கு உள்ளது என்று அரசுத் தரப்பு வழக்கறிஞர் சுரேந்திரமோகன் தெரிவித்தார்.

வழக்கும், தீர்ப்பும்: கோவையை அடுத்த பொள்ளாச்சியில் இளம் பெண்களை வீடியோ எடுத்து பாலியல் துன்புறுத்தல் செய்த சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட இளம்பெண் ஒருவர் கடந்த 2019 பிப்ரவரி மாதம் பொள்ளாச்சி அனைத்து மகளிர் காவல் துறையில் புகார் அளித்தார்.

புகாரின் பேரில் சபரிராஜன், திருநாவுக்கரசு, சதீஷ், வசந்தகுமார், மணிவண்ணன், பாபு, ஹேரன்பால், அருளானந்தம் மற்றும் அருண்குமார் ஆகிய 9 பேர் கைது செய்யப்பட்டு சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்த வழக்கில் 48 சாட்சிகளிடம் விசாரணை நடத்தப்பட்டது. சுமார் 200க்கும் மேற்பட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டன. வழக்கில் லேப்டாப், செல்போன், மெமரிகார்டு, கார் உள்ளிட்ட 30 எலக்ட்ரானிக்ஸ் ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. குற்றப்பத்திரிகை 390 பக்கங்கள் என வழக்கு விசாரணை ஆவணங்கள் மொத்தம் 1,500 பக்கங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

இந்திய தண்டனை சட்ட பிரிவில் 120பி, 366, 342, 354 (ஏ), 354 (பி), 376 (டி), 376 (2) (என்), 509 மற்றும் தகவல் தொழில்நுட்ப சட்டம், தமிழ்நாடு பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் சட்ட பிரிவு 4 ஆகிய பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. அரசு தரப்பில் சிபிஐ சிறப்பு வழக்கறிஞர் சுரேந்திரமோகன், எதிர்தரப்பில் வழக்கறிஞர் பாண்டிராஜ் ஆகியோர் ஆஜராகினர்.

அண்மையில் கைதான 9 பேரும் கோவை மகளிர் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டு ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்களிடம் நீதிபதி நந்தினிதேவி, சாட்சி விசாரணை குறித்து தனித்தனியாக சுமார் 50 கேள்விகளை கேட்டார்.

தொடர்ந்து எதிர்தரப்பு சாட்சி விசாரணைக்காக பொள்ளாச்சி நகர சப்இன்ஸ்பெக்டர் மற்றும் பொள்ளாச்சி அரசு மருத்துவமனை இருப்பிட மருத்துவரிடம் விசாரணை நடைபெற்றது. வழக்கில் அரசு மற்றும் எதிர்தரப்பு விசாரணை முடிவடைந்த நிலையில், வழக்கின் தீர்ப்பு மே 13ம் தேதி வழங்கப்படும் என மகளிர் நீதிமன்றம் அறிவித்தது.

9 பேருக்கும் சாகும் வரை ஆயுள்: அதன்படி, பொள்ளாச்சி பாலியல் வழக்கில் கைதான 9 பேரும் குற்றவாளிகள் என்று கோவை மகளிர் நீதிமன்ற நீதிபதி நந்தினிதேவி இன்று (மே.13) தீர்ப்பு வழங்கினார். 9 பேருக்குமான தண்டனை விவரம் மதியம் அறிவிக்கப்படும் என்றார். அதன்படி பகல் 12.50 மணியளவில் தண்டனை விவரம் வெளியானது.

அதன்படி, பொள்ளாச்சி பாலியல் வழக்கில் குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்ட 9 பேருக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை விதித்து கோவை மகளிர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. மேலும், பாதிக்கப்பட்ட 8 பெண்களுக்கும் ஒட்டுமொத்தமாக ரூ.85 லட்சம் இழப்பீடு வழங்கவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## உலக அளவில் புகழ்பெற்ற வேலூர் வி.ஐ.டி. நிறுவனர் வேந்தர் விஸ்வநாதனுக்கு நியூயார்க்கின் ஆர்.ஐ.டி மதிப்புமிகு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி கௌரவிப்பு

வேலூர், மே.14

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, பழைய காட்பாடி வி.ஐ.டி பல்கலைக்கழகம், உலக அளவில் புகழ்பெற்ற வேலூர் வி.ஐ.டி. பல்கலைக்கழக நிறுவனர், வேந்தர் விஸ்வநாதனுக்கு, 2025 மே மாதம் 9ம் தேதியன்று அமெரிக்காவின் நியூயார்க்கில் உள்ள ரோசெஸ்டர் தொழில்நுட்ப நிறுவனம் ஆர்.ஐ.டி நியூயார்க்கின், ஆர்.ஐ.டி மதிப்புமிகு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.




இந்தியா முழுவதும் அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் மேலாண்மை (STEM) எஸ்.டி.இ.எம். கல்வியை விரிவுபடுத்துவதில் புகழ்பெற்ற வி.ஐ.டி. பல்கலைக்கழக நிறுவனர் வேந்தர் விஸ்வநாதன் அவர்களின் தொலைநோக்கு மற்றும் தலைமைத்துவத்திற்கும் பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்கு ஆதரவளிப்பதில் அவர் காட்டிய அர்ப்பணிப்பிற்காகவும் ரோசெஸ்டர் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் தலைமை அதிகாரி டாக்டர். டேவிட் முன்சன், கல்வி விவரங்களுக்கான பேராசிரியர் மற்றும் மூத்த துணை தலைவர் டாக்டர். பிரபு டேவிட் ஆகியோர் விஜடியின் வேந்தருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்தனர்.

இந்த அங்கீகாரம் அமெரிக்க பல்கலைக்கழகங்களால் 3வது முறையாக ஒரு இந்தியருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதொரு சிறப்பு அம்சமாக கருதப்படுகிறது. இதற்கு முன் வேந்தருக்கு 2009ஆம் ஆண்டில் அமெரிக்காவின் மேற்கு வெர்ஜீனியா பல்கலைக்கழகமும் 2024 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் பிங்காம்டன் பல்கலைக்கழகமும் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து 2025 ஆம் ஆண்டில் கொல்கத்தா செயிண்ட் சேவியர்ஸ் பல்கலைக்கழகத்தால் கௌரவ டாக்டர் பட்டமும் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த கௌரவத்திற்கு நன்றி தெரிவித்து வி.ஐ.டி. வேந்தர் விஸ்வநாதன் தனக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கியதற்காக ஆர்.ஐ.டி குழும தலைமைக்கு நன்றி தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. இவ்விழாவில் வி.ஐ.டி.யின் துணைத் தலைவர்கள் சங்கர் விஸ்வநாதன், துணை வேந்தர் முனைவர் காஞ்சனா பாஸ்கரன் மற்றும் சர்வதேச உறவுகள் இயக்குனர் முனைவர் ஆர். சீனிவாசன் ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ‘சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட்டதால் பொள்ளாச்சி வழக்கில் உரிய நீதி கிடைத்துள்ளது’ அதிமுக

சென்னை: மே.14-

“முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அதிமுக அரசு, பொள்ளாச்சி பாலியல் வழக்கை முறையாகக் கையாண்டு, நடுநிலை தவறாமல் விசாரிக்கப்பட சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட்டதன் விளைவாக உரிய நீதி இன்று கிடைக்கப்பெற்றுள்ளது,” என்று அதிமுக தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சியின் அதிகாரபூர்வமான எக்ஸ் தளப் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், “பொள்ளாச்சி பாலியல் வழக்கில் கைது செய்யப்பட்ட 9 பேரும் குற்றவாளிகள் என அறிவித்து, கடும் தண்டனைகளை விதித்து கோவை மகளிர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருப்பது வரவேற்கத்தக்கது. முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அதிமுக அரசு, இந்த வழக்கை முறையாகக் கையாண்டு, நடுநிலை தவறாமல் விசாரிக்கப்பட சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட்டதன் விளைவாக உரிய நீதி இன்று கிடைக்கப்பெற்றுள்ளது.

திமுகவைப் போல் அரசியலுக்காக அவதூறுகளை அள்ளித் தெளிக்கும் அற்ப புத்தி எங்களுக்கு இல்லை. எங்களுக்கு மடியில் கனமில்லை, வழியில் பயமில்லை என்பதால் இந்த வழக்கை சிபிஐக்கு மாற்றினோம். பொள்ளாச்சி வழக்கில் சுயவிவரங்கள் வெளியானதாக சொன்ன திமுக, 6 ஆண்டுகளுக்கு பிறகு, அண்ணா பல்கலை. பாலியல் வழக்கில், பாதிக்கப்பட்ட மாணவியின் சுய விவரங்களை வெளியிட்டது யார் என்று சொல்லுமா? இது பாதிக்கப்பட்ட மாணவியை மிரட்டும் செயல் இல்லையா?

அண்ணா பல்கலை. வழக்கில் யாரைக் காப்பாற்ற எஃப்ஐஆரை லீக் செய்தது ஸ்டாலின் மாடல் திமுக அரசு? எஃப்ஐஆர் அடிப்படையில் யார் அந்த சார்? என்ற நியாயத்தின் கேள்வியைக் கேட்டோம். அந்த கேள்விக்கான விடையைக் கண்டறிய, நீதி கிடைக்க சிபிஐ விசாரணை கோரினோம். ஆனால், அதனை முழு மூச்சாக இந்த ஸ்டாலின் மாடல் திமுக அரசு எதிர்த்ததே, ஏன்? யாரைக் காப்பாற்ற துடிக்கிறது திமுக?

கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய மரணங்கள் வழக்கில் சிபிஐ விசாரணைக்கு எதிராக உச்ச நீதிமன்றம் வரை சென்றது ஸ்டாலின் மாடல் திமுக அரசு தானே? ஏன் சென்றது? நீதி கிடைப்பதில் என்ன பயம் இவர்களுக்கு? தெளிவாக சொல்கிறோம், எங்கள் ஆட்சியில் கைது செய்யப்பட்ட குற்றவாளிகளுக்கு, எங்களால் அமைக்கப்பட்ட சிபிஐ விசாரணையில் குற்றவாளிகள் உறுதி செய்யப்பட்டு, இன்று கடுமையான தண்டனைகளை அவர்கள் பெற்றிட காரணமாக அமைந்தது அதிமுக அரசு

“ஞானசேகரன் திமுக கொத்தடிமை அல்ல,அனுதாபி மட்டுமே” என்று முதல்வர் ஸ்டாலின் போன்று நாங்கள் உருட்டவும் இல்லை. உங்களை போன்று எந்த சாரையும் காப்பாற்ற முயற்சிக்கவும் இல்லை. திமுக எவ்வளவு அரசியல் கேவலங்களை அரங்கேற்றினாலும், இறுதியில் உண்மை மட்டுமே வெல்லும். இது இன்று நிரூபிக்கப்பட்டுள்ளது. இனியும் நிரூபிக்கப்படும். 2026ல் தமிழகத்தில் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான ஆட்சி அமைந்ததும் யார் அந்த சார்? என்ற கேள்விக்கான பதிலும், உரிய நீதியும் நிச்சயம் கிடைக்கும். அன்று திமுக தலைகுனிந்து நிற்கும், இது உறுதி.” என்று கூறப்பட்டுள்ளது.

முன்னதாக, பொள்ளாச்சி பாலியல் வழக்கில் கைது செய்யப்பட்ட 9 பேரும் குற்றவாளிகள் என அறிவித்த கோவை மகளிர் நீதிமன்றம் அவர்கள் அனைவருக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியது. மேலும், பாதிக்கப்பட்ட 8 பெண்களுக்கும் ஒட்டுமொத்தமாக ரூ.85 லட்சம் இழப்பீடு வழங்கவும் நீதிபதி உத்தரவிட்டார்.

மதிமுகவின் 32ஆம் ஆண்டு துவக்க விழாவை முன்னிட்டு

# முடிச்சூரில் அக்ஷயா முதியோர் இல்லத்தில் காலை உணவு மற்றும் கழக கொடியேற்று நிகழ்ச்சி

முடிச்சூர், மே.14-

செங்கல்பட்டு வடக்கு மாவட்டம் புனித தோமை யார்மலை ஒன்றிய முடிச்சூர் ஊராட்சி சார்பில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் 32ஆம் ஆண்டு துவக்க விழாவை முன்னிட்டு காலை உணவு முடிச்சூரில் அக்ஷயா முதியோர் இல்லத்தில் காலை உணவு வழங்கும் நிகழ்ச்சி செங்கல்பட்டு வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் முடிச்சூர் ஆர்.ஏ.ஜெய்சீலன் ஏற்பாட்டில் மிக சிறப்பாக நடைபெற்றது





இதில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு மாவட்ட கழக செயலாளர் மாவை மகேந்திரன் கலந்துகொண்டு அக்ஷயா முதியோர் இல்லத்தில் காலை உணவு வழங்கினார்கள் இந்த நிகழ்ச்சியில் மாநில பொறியாளர் அணி அமைப்பாளர் க.ஹேமநாதன், மாவட்ட அவை தலைவர் படப்பை க.செல்வம், பம்மல் பகுதி செயலாளர் பிரவீன் மற்றும் முடிச்சு நிர்வாகிகள் உடன் இருந்தனர்

அதனைத் தொடர்ந்து மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் 32ஆம் ஆண்டு துவக்க விழாவை முன்னிட்டு முடிச்சூர் பேருந்து நிலையம், அட்ட கம்பெனி ஜங்ஷன், அம்பேத்கர் திருமண மண்டபம், லட்சுமிநகர் பேருந்து நிலையம் நான்கு இடத்தில் கழக கொடியேற்றி நிகழ்ச்சி நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக மாநில பொறியாளர் அணி அமைப்பாளர் க.ஹேமநாதன், மாவட்ட அவை தலைவர் படப்பை க.செல்வம், பம்மல் பிரவீன் ஆகியோர் கலந்து கொண்டு கழக கொடி ஏற்றி வைத்து இனிப்புகள் வழங்கி கொண்டாடினார்கள் இந்த நிகழ்ச்சியில் முடிச்சூர் கழக நிர்வா கிகள் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



■ தமிழக முன்னாள் முதல்வரும்,அஇஅதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி 71 வது பிறந்த நாளை முன்னிட்டு, சிவகங்கை மாவட்ட அதிமுக சார்பில் பிள்ளையார்பட்டி ஸ்ரீ கற்பக விநாயகர் கோவிலில் சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது. சிவகங்கை மாவட்ட அதிமுக செயலாளரும் சிவகங்கை சட்டமன்ற உறுப்பினருமாகிய செந்தில்நாதன், தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிவகங்கை மாவட்ட ஒன்றிய, மாநகர,நகர ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.






பேரணாம்பட்டில் ஸ்ரீ பால த்ரிபுர சுந்தரி அம்பிகைக்கு 10ம் ஆண்டு விழா முன்னிட்டு

# உலக அமைதிக்காகவும், இயற்கை வளங்களை காக்கவும், மஹா யாகம் மற்றும் சிறப்பு பூஜை, திரளான பக்தர்கள் பங்கேற்பு

வேலூர், மே.14-

வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு தாலுகா, மொரசப்பள்ளி கிராமத்தில் உள்ள ஸ்ரீ பால த்ரிபுர சுந்தரி அம்பிகை ஆலயத்தில் 10ஆம் ஆண்டு மற்றும் சித்ரா பௌர்ணமி முன்னிட்டு செல்வம் மழை, உலக அமைதிக்காகவும், இயற்கை வளங்களை காக்க வேண்டியும் அம்பிகைக்கு விஷேச அபிஷேக ஆராதனை மிகச்சிறந்த மூலிகைகள் சமித்துகள் கொண்டு ஸ்ரீ தேவா ஐயர், ஸ்ரீ பாலு ஐயர், ஸ்ரீ ஷேஷாத்ரி ஐயங்கார், ஸ்ரீ ரகு ஐயர் ஆகியோர் கரங்களால் தசமஹா ஸ்ரீ வித்யா மஹா யாகம் பூஜைகள் நடைபெற்றது. இந்த விழாவினை இந்து தேசிய கட்சியின் மாநில தலைவர் சதீஷ்குமார் தலைமையிலும், பூ வியாபாரி ரமேஷ் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்விழாவில் சிறப்பு அழைப்பாளராக சாமுண்டியம்மன் கோயில் அறக்கட்டளை தலைவர் தொழிலதிபர் துரை வெங்கடேசன், உதவி ஆய்வாளர் ஒய்வு சத்தியமூர்த்தி இவ்விழாவில் கலந்து கொண்டு ஸ்ரீ பால த்ரிபுர சுந்தரி அம்பிகை ஆலயத்தின் சிறப்பு திருமணம் தடை குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்கியம், கடன் பிரச்சனை, தொழில் தடை போன்ற இந்த அம்மனை வணங்கி வந்தால் பக்தர்களுக்கு கேட்ட வரம் கொடுத்து மேல் உள்ள பிரச்சனைகள் நிவர்த்தி செய்கிறதாக இங்கு வரும் பக்தர்கள் கூறுகின்றனர். இந்த விழாவில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் ஏராளமான பெண்கள் ஆண்கள் மற்றும் உள்ளூர் வெளியூர் பக்தர்கள் என பலர் இந்த யாகசாலை பூஜையில் கலந்து கொண்டனர்.



■ சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை வட்டம் நகர சிவன் கோவிலில் 40 நகரத்தார் சார்பாக சுந்தரேஸ்வரர் மீனாட்சி அவர்களுடைய வெப்பத் திருவிழா நகரச் சிவன் கோயிலில் வெகு சிறப்பாக நடைபெற்றது இந்நிகழ்வில் அனைத்து கிராம பொதுமக்கள் மற்றும் நகர பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.,காவல்துறையினர் சிறப்பான பாதுகாப்பு ஏற்பாடு செய்து விழாவை சிறப்புற செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொட்டிவாக்கம் 181-வது வட்ட திமுக சார்பில் சாதனை விளக்க பொதுக்கூட்டம்

கொட்டிவாக்கம், மே.14-

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்க நல்லூர் கிழக்கு பகுதி, கொட்டிவாக்கம் 181வது வட்ட திமுக சார்பில் சென்னை தெற்கில் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு! சாதனை விளக்க பொதுக்கூட்டம் 12. 05.2025 திங்கட்கிழமை, மாலை 5 மணிக்கு, ஏ .ஜி .எஸ், காலனி கொட்டிவாக்கத்தில் 181 வது வட்டக் கழகச் செயலாளர், கே. வி. சாந்தப்பன் தலைமையில் நடை பெற்றது. சோழி ங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், எஸ் .அரவிந்த் ரமேஷ் கூட்டத்தில் திமுக அரசு எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றியுள்ளது, பிற்படுத்தப்பட்டோர் தாழ்த்தப்பட்டோருக்கு முக்கியத்துவம் அளித்து செயல்பட்டு வருகிறது, காலை உணவு திட்டம்





சாதனைகளை விளக்கி கூறினார். சிறப்புரையாக சைதை. சாதிக், முரசொலி .மூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர், பாலவாக்கம், க. சோமு, மாவட்ட துணைச் செயலாளர், முன்னாள் ஒன்றிய குழு தலைவர், பாலவாக்கம், மு. மனோகரன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஆ. அரிகிருஷ்ணன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர், கா. வீ. தியாகராஜன், காஞ்சி மாவட்ட முன்னாள் துணை செயலாளர், வி. எட்டியப்பன், ஜி. ரவிக்குமார், கே.வி.ராதாகிருஷ்ணன், 183 வட்டக் கழக செயலாளர், பி. எஸ். ஆறுமுகம், 192 வது வட்டக் கழகச் செயலாளர், எஸ். கர்ணா, 190 வது வட்டக் கழக செயலாளர், பி .என். ஜோதி, பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் இரா. நாகேந்திரன், பகுதி துணை அமைப்பாளர்கள் ஏஜிஎஸ், ஏ. ரவி, எஸ். வனஜா, 181 வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள், து. சந்தானகிருஷ்ணன், இரா .செந்தில், தே. சிவ பிரபாகரன், 181 வது வட்ட பாக முகவர்கள், ஆர். ராம ஜெயம், டி. மாரியப்பன், எ. இளங்கோவன், எம். குமார், எம் .மாதவன், ஐ. இந்திரா, 181 வது வட்டக் கழக முன்னோடிகள், எஸ். விஜயசந்திரன், ஆர். கே. பிரகாஷ், எஸ். தனபால், நன்றி உரையாக 181 வது வட்டக் கழக துணைச் செயலாளர்கள், ஆர். சிவ சங்கரன், கே. ராமு உள்ளிட்ட மாநில, மாவட்ட, பகுதி, ஒன்றிய, வட்ட கழக, ஊராட்சி மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.







# எடப்பாடி பழனிச்சாமி பிறந்தநாள் விழா கொண்டாட்டம்

மானாமதுரை, மே.14-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் தமிழக எதிர்க்கட்சித் தலைவரும் அதிமுக பொதுச் செயலாளருமான எடப்பாடி கே.பழனிச்சாமி 71 வது பிறந்த நாளை முன்னிட்டு

மானாமதுரை கீழ்க்கரையில் அமைந்துள்ள ஸ்ரீ வீர ஆஞ்சநேயர் திருக்கோவிலில் சிறப்பு பூஜை நடைபெற்றது.

இப் பூஜைக்கு மானாமதுரை கிழக்கு ஒன்றிய செயலாளரும் முன்னாள் எம்எல்ஏ எம்.குணசேகரன் ஏற்பாடு செய்திருந்தார்.

இந்த பூஜையில் முன்னாள் எம்எல்ஏ நாகராஜன் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜெயபிரகாஷ் ஒன்றிய மகளிர் அணி செயலாளர் மீனாட்சி நகர மகளிரணி செயலாளர் பரஞ்சோதி ,ஒன்றிய இளைஞர் அணி செயலாளர் கீழமேல்குடி முத்து, மாவட்ட நிர்வாகிகள் சின்னை மாரியப்பன், சோமன், பாலசுப்பிரமணியன், சங்கையா, ராமு மாவட்ட , ஒன்றிய நிர்வாகிகள்,கிளைச் செயலாளர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# முடிச்சூரில் எடப்பாடி யார் அவர்களின் 71வது பிறந்தநாளை முன்னிட்டு பூத் கமிட்டி பொறுப்பாளர்களுக்கு நலத்திட்ட உதவி வழங்கும் விழா

முடிச்சூர், மே.14-

செங்கல்பட்டு மாவட்டம் பரங்கிமலை மேற்கு ஒன்றிய முடிச்சூர் ஊராட்சியில் கழக பொதுச்செயலாளர் புரட்சித்தமிழர் எடப்பாடி யார் அவர்களின் 71வது பிறந்த நாளை முன்னிட்டு பூத் கமிட்டி பொறுப்பாளர்களுக்கு நலத்திட்ட உதவி வழங்கும் விழா பரங்கிமலை மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் எம்.பி.மனோகரன் தலைமையில் நடைபெற்றது

இது சிறப்பு அழைப் பாளராக கழக வர்த்தக அணி செயலாளர் முன்னாள் அமைச்சர் சீதா செல்ல பாண்டியன், செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக செயலாளர் சிட்லபாக்கம் ச.ராஜேந்திரன், அனைத்து உலக எம்ஜிஆர் மன்ற துணைச் செயலாளர் நாவலூர் முத்து, அனைத்து உலக எம்ஜிஆர் மன்ற தலைவர் முன்னாள் அமைச்சர் டி.கே.எம் சின்னையா ஆகியோர் கலந்து கொண்டு பூத் கமிட்டி பொறுப்பாளர்களுக்கு எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்று எடுத்துரைத்து சிறப்புரை யாற்றினார் பின்னர் அனைவருக்கும் நல திட்ட உதவி வழங்கினார் இந்த நிகழ்ச்சியில் மாவட்ட பிரதிநிதி முடிச்சூர் 8வது வார்டு உறுப்பினர் ஏ.அருள், பரங்கிமலை மேற்கு ஒன்றிய எம்ஜிஆர் மன்ற இணைச்செயலாளர் முடிச்சூர் முன்னாள் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் சசிகலா கல்கி, பரங்கிமலை மேற்கு ஒன்றிய அம்மா பேரவை இணைச் செயலாளர் 11வது வார்டு கிளைக் கழகச் செயலாளர் டி.வி.ஆர் வெங்கட்ராமன் மற்றும் கிளை கழக செயலாளர் மகளிர் அணி நிர்வாகிகள் பிற அணிகளின் நிர்வாகிகள் மற்றும் பூத் கமிட்டி பொறுப்பாளர்கள் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்

# ராணிப்பேட்டை மாவட்டம் நகரிகுப்பம் கொள்முதல் நிலைய வாசலில் வீணாகி வரும் நெல் மூட்டைகள்: கலெக்டரிடம் விவசாயிகள் புகார்

ராணிப்பேட்டை, மே.14-

நகரிகுப்பம் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் நெல் மூட்டைகளை கொள்முதல் செய்யாததால் 400க்கும் மேற்பட்ட நெல் மூட்டைகள் வீணாகி வருவதாக கலெக்டரிடம் விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.



ராணிப்பேட்டை கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் வாராந்திர மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம் நேற்று நடந்தது. கலெக்டர் சந்திரகலா தலைமை தாங்கி பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் இருந்து கோரிக்கை மனுக்களை பெற்று விசாரணை நடத்தினார்.

டிஆர்ஓ சுரேஷ், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் ஜெயசுதா, கலெக்டரின் நேர்முக உதவியாளர் விஜயராகவன், சமூக பாதுகாப்பு திட்ட தனி துணை ஆட்சியர் கீதாலட்சுமி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் அறிவுடைநம்பி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் மீனா, கலால் உதவி ஆணையர் ராஜ்குமார், மாற்றுத்திறனாளி நல அலுவலர் சரவணன் ஆகியோரும் பொதுமக்களிடம் மனுக்களை பெற்றனர்.

இக்கூட்டத்தில் தக்கோலம் எஸ்.என். கண்டிகை பகுதியை சேர்ந்த நந்தகோபால் என்பவர் அளித்த மனுவில் கூறியிருப்பதாவது: நகரிகுப்பம் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் நெல் மூட்டைகளை விற்பனை செய்தோம். ஆனால், எங்களது 400க்கும் மேற்பட்ட நெல் மூட்டைகளை 20 நாட்களுக்கும் மேலாக நெல் கொள்முதல் நிலைய வாசலில் காக்க வைத்துள்ளனர்.

எங்களுக்கு பின்பு அறுவடை செய்தவர்கள் 20க்கும் மேற்பட்டோரின் நெல் மூட்டைகளை வாங்கிக் கொண்டனர். ஆனால், எங்களின் நெல் மூட்டைகளை பெற்றுக்கொள்ளவில்லை.

தற்போது கலெக்டரின் உத்தரவின் பேரில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் மூடுவதாக தெரிவித்தனர். மழையிலும் வெயிலிலும் பாதுகாத்து நாங்கள் அறுவடை செய்த நெல் வெயிலில் உள்ளது. 25 நாட்களுக்கு மேலாக இருப்பதால் அடுத்து ஒரு மழை பெய்தாலும் நெல் முளைவிட்டுவிடும். கடன்பட்டு விவசாயம் செய்த நாங்கள் நெல் மூட்டைகளை விற்க முடியாமல் உள்ளோம். எங்களது நெல் மூட்டைகளை வேறு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தின் மூலம் விற்க வழிவகை செய்ய வேண்டும்.

இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது. திமிரி பகுதியை சேர்ந்த பெண் அளித்த மனுவில், எனக்கு திருமணமாகி இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். மிகவும் ஏழ்மை நிலையில் வாழ்ந்து வருகிறோம். கடந்த 2 வருடங்களுக்கு முன்பு நான் மருத்துவ பரிசோதனை செய்து கொண்டேன். அப்போது, எனக்கு புற்றுநோய் இருப்பது கண்டறியப் பட்டது. பல இடங்களில் மருத்துவ பார்ப்பதற்கு செலவு செய்ய முடியாமல் தவிக்கிறேன். எனவே, மருத்துவம் செய்து கொள்ள உதவி செய்ய வேண்டும் என கூறியிருந்தார்.


நெமிலி வட்டம் திருமால்பூர் அண்ணா நகரை சேர்ந்த துரைராஜ் என்பவர் அளித்த மனுவில், எங்களது கிராமத்தில் நெசவுத்தொழில், விவசாயம் செய்து வருகிறோம். எங்களது பகுதியில் இருந்து காஞ்சிபுரம் சென்று வருவதற்கும், ஆற்காடு பகுதிக்கு சென்று வருவதற்கும் போதிய பேருந்து வசதிகள் இல்லாமல் அவதிக்குள்ளாகி வருகிறோம்.

பள்ளி, கல்லூரிக்கு மாணவர்கள் சென்று வர குறித்த நேரத்தில் பேருந்து வசதி இல்லாததால் அவதிக்குள்ளாகி வருகின்றனர். எனவே, திருமால்பூர் பகுதியில் இருந்து ஆற்காடு மற்றும் காஞ்சிபுரம் சென்று வர பேருந்து வசதி ஏற்படுத்தி தர வேண்டும் என கூறியிருந்தனர். இலுப்பை தண்டலம் பகுதியை சேர்ந்த கார்த்திகேயன் என்பவர் அளித்த மனுவில் கூறியிருப்பதாவது:

எங்கள் பகுதியில் ஆதிதிராவிடர் தொடக்கப் பள்ளியின் வளர்ச்சிக்காக புதிய கட்டிடம் கட்டும் பணிக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் பஞ்சாயத்து ஆக்கிரமிப்பு மற்றும் கோயில் ஆக்கிரமிப்பு போன்றவைகளை கட்டுப்படுத்த கலெக்டரிடம் தெரிவித்து வருகிறேன். தற்போது பள்ளி பராமரித்து வந்த இடத்தில் பஞ்சாயத்து அலுவலகம் கட்டுவதற்கான பணியை தொடங்கி உள்ளனர். இதேபோல் பஞ்சாயத்திற்கு விளையாட்டு மைதானம் அமைக்கும் பணியையும் செய்துள்ளனர்.

இது பள்ளியின் வளர்ச்சியை கெடுப்பதற்கான நோக்கமாக இருக்கிறது. ஏற்கனவே பஞ்சாயத்து அலுவலகம் உள்ள இடத்தில் கட்டிடம் கட்டுவது அல்லது வேறொரு இடத்தில் பஞ்சாயத்து அலுவலகம் கட்டுவதற்கான அனுமதியை தர வேண்டும். பள்ளிக்கென்று ஒதுக்கப்பட்ட இடத்தை சுற்றிலும் சுற்றுச்சுவர் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. தொடர்ந்து, ஊன்றுகோல் கேட்டு விண்ணப்பித்த திமிரியை சேர்ந்த மாற்றுத்திறனாளி பெண்ணுக்கு மாற்றுத்திறனாளி நலத்துறை சார்பில் ஊன்றுகோலை கலெக்டர் சந்திரகலா வழங்கினார். மேலும், பல்வேறு கோரிக்கைகள் மற்றும் பொதுபிரச்னைகள் குறித்து மொத்தம் 316 மனுக்கள் வரப்பெற்றன.




## கல்விக்கான நிதியை மத்திய அரசு வழங்க மறுக்கிறது என கூறும் திமுக அரசின் முறைகேடுகள் தொடர்கின்றன

காரைக்குடி, மே.14-

சிவகங்கை மாவட்டம் அனைவருக்கும் கல்வி திட்டத்தில் (சர்வசிக்ஷா அபியான்) கணிணி பயிற்சி கூடங்கள் அமைக்கவும், கணினி ஆசிரியர்களை நியமிக்கவும் மத்திய அரசு நிதியளித்தது. ஆனால்,இன்று வரை பயிற்சி கூடங்களும் அமைக்கப்படவில்லை, கணினி ஆசிரியர்களும் நியமிக்கப்படவில்லை. கணினி பாடமும் இல்லை, அதற்கான பாட வேலைகளும் இல்லை.,

2021-2025 ஆம் ஆண்டு வரை கணினி பயிற்றுநர்கள் நியமனத்திற்காக, சோதனை கூடங்கள் அமைப்பதற்காக மொத்தம் 874 கோடி ரூபாயை மத்திய அரசு, தமிழக அரசுக்கு கணினி கல்விக்காக, அனைவருக்கும் கல்வி திட்டத்தில் தகவல் மற்றும் தொடர்பு தொழில் நுட்ப திட்ட (Samaªgra Siksha ICT) நிதியாக வழங்கியுள்ளது. ஆனால், எந்த குறிப்பிட்ட நோக்கத்திற்காக நிதி அளிக்கப்பட்டதோ அதற்காக செலவிட வில்லை., மேலும் ஏழை கிராமப்புற மாணவர் களுக்கு கணிணி கல்வியை அளிக்க மறுத்ததோடு, அதற்காக மத்திய அரசு அளித்த நிதியை வேறு செலவுகளுக்கு பயன்படுத்தியது கண்டிக்கத்தக்கது. மாநில உரிமைகள் குறித்து பேசினால் மட்டும் போதாது, தன் கடமை களையும் முறைகேடுகள் இல்லாமல் மாநில அரசு நிறைவேற்ற வேண்டும் என்பதை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உணர வேண்டுமென இந்த முறைகேடு தொடர்பான ஆவணங்களை மத்திய அமைச்சருக்கு தெரியபடுத்தும் விதமாக பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவரான பி.ராஜா அவர்களிடம் ஆவணங்கள் அடங்கிய கோப்பை தமிழ்நாடு பி.எட் கணினி அறிவியல் வேலையில்லா பட்டதாரிகள் சங்க நிர்வாகிகள் லெட்சுமி, செந்தில் குமார், பாண்டிமுத்து, செபஸ்டி இமாகுலேட் மேரி, இளவரசி , குளோரி, வனிதா, ஜான்சி ஆரோக்கிய ராணி மற்றும் உறுப்பினர்கள் வழங்கினர்.



## வேலூரில், தீயணைப்பு துறை சார்பில் பேருந்து ஓட்டுனர்களுக்கு பள்ளி வாகனத்தில் தீ விபத்து ஏற்பட்டால் உடனடியாக கடைப்பிடிக்க வேண்டிய ஒத்திகை பயிற்சி

மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி மற்றும் வட்டார போக்குவரத்து துறை அலுவலர் சுந்தர்ராஜன் ஆகியோர் பங்கேற்பு

வேலூர், மே.14-

வேலூர் மாவட்டம், காட்பாடி அருகே, வேலூர் மாவட்டத்தில் உள்ள தனியார் பள்ளி வாகனங்களை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தின் மூலம் ஆய்வு செய்யும் பணியினை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி மற்றும் வட்டாரப் போக்குவரத்து துறை அலுவலர் சுந்தர்ராஜன் ஆகியோர் முன்னிலையில், தனியார் பள்ளி மைதானத்தில் பள்ளி வாகனங்களில் ஓட்டுநர்களுக்கு திடீரென தீப்பிடித்தால் உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஒத்திகை நிகழ்ச்சி காட்பாடி தீயணைப்பு துறை நிலைய அலுவலர் முருகேசன் தலைமையில் நடைபெற்றது. இந்த தீயணைப்பு ஒத்திகை நிகழ்ச்சியின் போது வேலூர் வருவாய் கோட்டாட்சியர் செந்தில்குமார், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) தயாளன், வட்டாட்சியர் ஜெகதீசன், போக்குவரத்து துறை பிரேக்கிங் இன்ஸ்பெக்டர்கள் ராஜ்குமார், ராஜேஷ் கண்ணா, காட்பாடி தீயணைப்பு துறை நிலைய அலுவலர் முருகேசன் துறை சார்ந்த பணியாளர்கள் மற்றும் போக்குவரத்து துறை, கல்வித்துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.



## ஆற்காட்டில் நூல் வெளியீட்டு விழா: கவிஞர் த.புருஷோத்தமன் எழுதிய மனதில் மலர்ந்த மகத்தான கவிதைகள் நூல் கவிஞர் ச.லக்குமிபதி வெளியிட்டார்

ஆற்காடு, மே.14-

இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு தாலுகா, ஆற்காடு ரேணுகாம்பாள் திருமண மண்டபம், நூல் வெளியீட்டு விழா, காங்கேயநல்லூர்,

திருமுருக கிருபானந்த வாரியார் அரசு மேல்நிலைப்பள்ளி 1990 ஆம் ஆண்டு முன்னாள் மாணவர்கள் சங்க இணை செயலாளர் கவிஞர் த.புருஷோத்தமன் எழுதிய ‘மனதில் மலர்ந்த மகத்தான கவிதைகள்’ நூல் வெளியீட்டு விழா, வேலூர் முத்துரங்கம் அரசு கலைக் கல்லூரி முதல்வர் சு.ஸ்ரீதரன் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு ஆற்காடு ஆர்.லோகநாதன், எம்.ராகினி ஆகியோர் வரவேற்புரையாற்றினர்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக வேலூர் வாசகர் வட்ட செயலாளர் கவிஞர் ச.லக்குமிபதி கலந்து கொண்டு நூலை வெளியிட்டு விழாப் பேருரையாற்றினார். முதல் பிரதியை தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி வழக்கறிஞர் சங்கங்களின் கூட்டமைப்பின் இணைச்செயலாளர் எஸ்.ஆதிசேஷன் பெற்றுக் கொண்டார். இதனைத் தொடர்ந்து வேலூர் பி.ரமணி பழனி, கேஜிஎப். ஏ.வேதாசலம், ஆற்காடு எம்.ஜெயச்சந்திரன் ஆகியோர் நூலை பெற்றுக் கொண்டனர். மேலும், சென்னை பல்லவன் போக்கு வரத்து கழக முன்னாள் நடத்துனர் பி.செங்கல்வராயன், திருமுருக கிருபானந்த வாரியார் அரசு மேல்நிலைப் பள்ளி 1990 ஆம் ஆண்டு முன்னாள் மாணவர்கள் சங்க தலைவர் கவிஞர் எஸ்.கே. எம்.மோகன், செயலாளர் எம்.சசிகுமார், ஆதிதிராவிடர் நலத்துறை முன்னாள் அலுவலக உதவியாளர் கே.குமரேசன் ஆகியோர் விழாவை சிறப்பித்து சிறப்புரையாற்றினர்.

வள்ளலார் நிதியுதவி நடுநிலை பள்ளி தலைமை ஆசிரியை ஜெயந்தி பூங்கொடி, திருமுருக கிருபானந்த வாரியார் அரசினர் மேல்நிலைப் பள்ளி 1990ம் ஆண்டு முன்னாள் மாணவர்கள் சங்க நிர்வாகிகள் நெடுமாறன், தண்டபாணி, விஜயா மற்றும் வேதநாயகம் உட்பட பலர் கலந்து கொண்டனர். நூல் ஆசிரியர், கவிஞர் த.புருஷோத்தமன் ஏற்புரை நிகழ்த்தினார். விழா இறுதியில் பவானி புருஷோத்தமன் நன்றியுரை யாற்றி விழா நிறைவுப்பெற்றது.

## இந்திய நாட்டின் இராணுவத்தினருக்கும் நாட்டின் தலைமைக்கும் தெய்வீக பலம் கிடைக்க வேண்டி ஆந்திர மாநிலம் ஜனசேனா கட்சி எம்எல்ஏ தலைமையிலான நூற்றுக்கும் மேற்பட்டோர் பழனியில் சாமி தரிசனம் செய்தனர்

பழனி, மே.14-

காஷ்மீர் மாநிலம் பஹல்காமில் சுற்றுலா பயணிகளை குறி வைத்து பாகிஸ்தான் தீவிரவாதிகள் சுட்டதில் 26பேர் உயிரிழந்தனர். இதையடுத்து இந்திய இராணுவம் பாகிஸ்தானுக்குள் இருந்த தீவிரவாதிகளை வேட்டையாடியது. இதையடுத்து பாகிஸ்தான் ராணுவத்தினருக்கும் இந்திய ராணுவத்தினருக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது. இந்நிலையில் இந்திய ராணுவத்தினருக்கும் இந்திய நாட்டின் தலைமைக்கும் கடவுள் அருள் மற்றும் ஆன்மிக பலம் கிடைக்க வேண்டி தமிழகத்தில் உள்ள அறுபடை வீடுகளில் உள்ள முருகன் கோவில்களிலும் ஜனசேனா கட்சியின் சார்பில் சிறப்பு வழிபாடு நடத்தப்படும் என ஆந்திர துணை முதலமைச்சர் பவன் கல்யாண் தெரி



வித்தார். இதைத்தொடர்ந்து ஜனசேனா கட்சியை சேர்ந்த காக்கிநாடா சட்டமன்ற உறுப்பினர் பந்தம் வெங்கடேஸ்வரா ராவ் (நானாஜி) தலைமையிலான ஜனசேனா கட்சியை சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட தொண்டர்கள் மூன்றாம்படை வீடான பழனி முருகன் கோவிலுக்கு இன்று வருகை தந்தனர். பழனி முருகன் கோவிலில் சாமி தரிசனம் செய்த கட்சியினர் இந்திய ராணுவத்திற்கும், பாரதப் பிரதமர் நரேந்திர மோடி பெயரிலும் அர்ச்சனை செய்து பிரசாதம் பெற்றுக் கொண்டனர். தொடர்ந்து காக்கிநாடா சட்டமன்ற உறுப்பினர் பந்தம் வெங்கடேஸ்வரா ராவ் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறிய தாவது:

ஜனசேனா கட்சித் தலைவரும் ஆந்திரப் பிரதேச துணை முதல்வருமான பவன் கல்யாண் வழிகாட்டுதலின் படி, தமிழகத்தின் ஆறுபடை வீடுகளின் முருகன் கோயில்களில் பிரார்த்தனை நடத்தப்பட்டது. தீவிரவாதத்தை ஒழிக்கும் வகையில் இந்திய இராணுவம் மேற்கொண்ட ஆபரேஷன் சிந்தூர் மூலம் நமது இந்திய இராணு வத்தின் வலிமை உலகிற்கு தெரியப் படுத்தப்பட்டது.

ஜம்மு - காஷ்மீர், பஞ்சாப், ராஜஸ்தான் மற்றும் குஜராத் போன்ற முக்கியமான எல்லைப் பகுதிகளில் பணியமர்த்தப்பட்ட நமது வீரர்களுக்கு மன வலிமையும், தெய்வீக அருளும் அவசியம் என்பதை உணர்ந்து ஆந்திர துணைமுதல்வர் பவன் கல்யாண் “தேசமே முதலாவது அரசியல், மற்ற அனைத்தும் அடுத்தது தான்” என்ற நம்பிக்கையை வலியுறுத்தும் வகையில் தேசமே தெய்வம் என்பதை வலியுறுத்தி தமிழகத்தில் உள்ள முருகன் கோவில்களில் ஜனசேனா கட்சியின் சார்பில் வழிபாடு நடத்தப்பட்டதாகவும் தெரிவித்தார்.

## வருவாய்த் தீர்வாயம்/ஜமாபந்தி

மதுரை, மே.14-

மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், மதுரை வடக்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் வருவாய் தீர்வாயத் அலுவலர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் தலைமையில் 14.05.2025, 15.05.2025, 16.05.2025, 20.05.2025 மற்றும் 22.05.2025 ஆகிய ஐந்து நாட்கள் கூளப்பாண்டி உள்வட்டம், சத்திரப்பட்டி உள்வட்டம், சமயநல்லூர் உள்வட்டம் உள்வட்டம், குலமங்கலம் மற்றும் சாத்தமங்கலம் உள்வட்டத்திற்குட்பட்ட கிராமங்களுக்கு வருவாய்த் தீர்வாயம்/ஜமாபந்தி நடைபெற உள்ளது. எனவே, மேற்படி நாளன்று சம்மந்தப்பட்ட கிராம பொதுமக்கள் தங்களது கோரிக்கைகளை மனுவாக சமர்ப்பித்து பயன்பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

## கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் புதிதாக சேர ஜூன் முதல் விண்ணப்பம்

சென்னை, மே.14-

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் புதிதாக சேர ஜூன் முதல் விண்ணப்பங்கள் வழங்கப்படும். தமிழ்நாட்டு மக்களிடம் குறிப்பாக பெண்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ள திட்டம் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிலுள்ள தகுதி வாய்ந்த 1 கோடியே 14 இலட்சத்து 61 ஆயிரம் பெண்களுக்கு ஒவ்வொரு மாதமும் 15ம் தேதி அவரவர் வங்கி கணக்குகளில் ரூ.1000 வரவு வைக்கப்படுகிறது. இத்திட்டத்தில் தகுதி வாய்ந்த சில குடும்பத் தலைவிகள் இன்னும் இதில் இணையாமல் உள்ளனர். இந்நிலையில் மாதம் ரூ.1000 கிடைக்காத பெண்கள், எங்களுக்கும் வழங்க வேண்டும் என்று தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதற்கு தீர்வு காணும் வகையில் தமிழ்நாடு முழுவதும் ஜூன் மாதம் 4ம் தேதி மக்களுடன் முதல்வர் நிகழ்ச்சி நடைபெற உள்ள நிலையில், மகளிர் உரிமைத் தொகை கேட்டு விண்ணப்பிக்கலாம் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு வெளியிட்டிருந்தார். மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்திற்கு விண்ணப் பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளதால் தமிழ்நாடு முழுவதும் 9 ஆயிரம் இடங்களில் முகாம்கள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இதற்காக இத்திட்டத்தில் பணியாற்றிய அதிகாரிகளுக்கு சென்னையில் இன்று பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் மக்களுடன் முதல்வர் முகாம் எங்கெங்கு நடத்த வேண்டும் என்ற விவரங்களும் அதிகாரிகளிடம் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதனால் தகுதி வாய்ந்த குடும்பத் தலைவிகள் தற்போது மகிழ்ச்சியில் உள்ளனர்.

## ஆழியார் அணை நீர்மட்டம் 73 அடியாக உயர்வு பழைய ஆயக்கட்டு பாசன திறப்புக்காக தண்ணீர் தேக்கி வைக்கப்படுகிறது

பொள்ளாச்சி, மே.14-

கோவை மாவட்டம் பொள்ளாச்சியை அடுத்த பிஏபி திட்டத்திற்குட்பட்ட ஆழியார் அணையின் மொத்த அடி 120 அடியாகும். இந்த அணையிலிருந்து பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பாசன பகுதிகளுக்கும், குடிநீர் தேவைக்கும். வருடத்தில் குறிப்பிட்ட டிஎம்சி தண்ணீர் கேரளாவுக்கு திறக்கப்படுகிறது. கடந்த ஆண்டில் தென்மேற்கு பருவமழை மற்றும் வடகிழக்கு பருவமழை என அடுத்தடுத்து பெய்தது. இதனால், ஆழியார் அணையின் நீர்மட்டம் சில மாதமாக தொடர்ந்து உயர்ந்து இருந்தது. இந்த ஆண்டில் கடந்த ஜனவரி மாதம் வரையிலும் தண்ணீர் இருப்பு ஓரளவு இருந்தது. அதன்பின் சில மாதமாக மழையில்லாததால், தண்ணீர் வரத்து மிகவும் குறைந்து ஆழியார் அணையின் நீர்மட்டம் மெல்ல மெல்ல சரிந்து கடந்த ஏப்ரல் மாதம் 65 அடியானது. இந்நிலையில், கடந்த இரண்டு வாரத்துக்கு முன்பிருந்து காடாம்பாறை மற்றும் கண்டூர் கால்வாயிலிருந்து 150 கன அடி முதல், 200 கன அடி வரை தண்ணீர் திறப்பு இருந்தது. இதனால், ஆழியார் அணையின் நீர்மட்டம் உயர்ந்தது. இதனால், தற்போது ஆழியார் அணையின் நீர்மட்டம் 73 அடியாக உயர்ந்துள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் கோடை மழை குறைவாக இருப்பதால், ஆழியார் அணையில் தண்ணீரை தேக்கி, விரைவில் பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு திறப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு இருக்கும்.

அதுபோல் இந்த முறையும் பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு இருக்கும் என கூறப்படுகிறது. இதனால், குடிநீர் தேவைக்காகவும், பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு தேவையான தண்ணீர் திறக்கவும், ஆழியார் அணையில் தண்ணீரை தேக்கி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.



■ சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலில் குரு பெயர்ச்சி விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. 11.05.25 ஞாயிற்றுக்கிழமை அன்று பகல் 1.09 மணிக்கு ரிஷப ராசியில் இருந்து மிதுன ராசிக்கு குரு பெயர்ச்சி ஆகிறார். பகல் ஒரு மணி முதல் ஜெபம் சிறப்பு ஹோமம் உலக நன்மை வேண்டி நகர சிவன் கோவில் அதியான பட்டர் ரவி சர்மா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நிர்வாகிகள் திரு அண்ணாமலை செட்டியார், சுப்பிரமணியன் செட்டியார், அருணாச்சலம் செட்டியார் ஆகியோர் குரு பெயர்ச்சி விழாவுக்கான ஏற்பாடுகளை வெகு சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.




■ மதுரை சித்திரை திருவிழாவில் கள்ளழகரை வரவேற்று அதிமுக தொண்டரணி தலைவர் ஓ. பன்னீர்செல்வம் சார்பில் மதுரை வடக்கு 5ஆம் பகுதி செயலாளர் மேலமடை ஜெயக்குமார் உள்ளிட்ட தொண்டர்கள் நீர்மோர்,ரஸ்னா, ரோஸ் மில்க் உள்ளிட்ட பானங்களை பக்தர்களுக்கு வழங்கினார்கள்.

## குடியாத்தம் கெங்கையம்மன் திருவிழா நெருங்கும் நிலையில் கே.வி.குப்பம் ஆட்டுச்சந்தையில் வியாபாரம் அமோகம்

கே.வி.குப்பம், மே.14-

குடியாத்தம் கெங்கையம்மன் திருவிழா நெருங்கும் நிலையில் கே.வி.குப்பத்தில் நேற்று காலை நடைபெற்ற ஆட்டுச்சந்தையில் ஆடுகள் விற்பனை அமோகமாக நடைபெற்றது. இதில் ரூ.80 லட்சம் வரை ஆடுகள் விற்பனை செய்யப்பட்டது.

வேலூர் மாவட்டம் கே.வி.குப்பத்தில் ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை யன்று ஆட்டுச்சந்தை நடப்பது வழக்கம். இந்நிலையில் திங்கட்கிழமையான நேற்று காலை சந்தை வழக்கம்போல் கூடியது.

வேலூர் மாவட்டத்தில் உள்ள பல்வேறு பகுதிகளில் இருந்தும், அண்டை மாநிலமான கர்நாடகா, ஆந்திரா ஆகிய பகுதிகளில் இருந்தும் நூற்றுக்கணக்கான ஆடுகள் லோடு வேன் மூலம் அழைத்து வரப்பட்டன. இதில்



ஏராளமான வியாபாரிகள் போட்டிப்போட்டுக்கொண்டு ஆடுகளை கொண்டு வந்து வியாபாரம் செய்தனர். ஆடுகளின் தரத்திற்கேற்ப விலை நிர்ணயிக்கப்பட்டு விற்கப்பட்டது.

வெள்ளாடுகள், முத்து கிடாய் ரகங்கள், நாட்டு ரக கிடாய்கள், கசையாடுகள், செம்மறி ஆடுகள், என பல்வேறு ரகங்கள் கொண்ட ஆடுகள் அதிகம் கொண்டுவரப்பட்டிருந்தது.

மொத்தமாக 3,000 ஆடுகள் வரையும், தலா ஒரு ஆடு ரூ.20 ஆயிரம் முதல் 30 ஆயிரம் வரை விற்பனையானதாக வியாபாரிகள் தெரிவித்தனர். கிராமங்களில் அம்மன் திருவிழாக்கள் தற்போது தொடங்கி உள்ளதாலும், நேர்த்திக்கடனுக்காக ஆடுகள் வெட்டுபவர்கள் அதிக அளவில் ஆடுகளை வாங்குவதால், ஆடுகள் விலை கணிசமாக உயர்ந்துள்ளது.

மேலும் வேலூர் மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற குடியாத்தம் கெங்கையம்மன் திருவிழா வருகிற 15ம் தேதி நடக்கவுள்ள நிலையில் ஆடுகள் வியாபாரம் கணிசமாக உயர்ந்துள்ளது.

இதேபோன்று வரும் வாரங்களில் கூடுதலாக வியாபாரம் களை கட்டும் என்ற எதிர்பார்ப்பில் இருப்பதாக வியாபாரிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.



## மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் நடைபெற்றது

திருப்பூர், மே.14-

திருப்பூர் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

ஒவ்வொரு வாரமும் திங்கள் கிழமைகளில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு அவை அனைத்தும் தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உரிய தீர்வு காணப்பட்டு வருகிறது.

அந்த வகையில், திங்கட்கிழமை நடைபெற்ற மக்கள் குறைதீர்ப்பு நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து வீட்டுமனை பட்டா மற்றும் முதியோர் உதவித்தொகை, புதிய குடும்ப அட்டை வேண்டியும், சாலை வசதி, குடிநீர் வசதி வேண்டியும் என பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 380 மனுக்களை பெற்றுக் கொண்டதுடன் மனுதாரர்கள் முன்னிலையிலேயே விசாரனை செய்து அதன் மீது உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மாற்றுத்திறனாளிக்கு ரூ.8,900/ மதிப்பீட்டிலான வீல்சேர் மற்றும் சமூகநலத்துறையின் சார்பில் ரூ.2,100/ மதிப்பீட்டி லான பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டம் தொடர்பான விழிப்புணர்வு நிழற்குடையினை மாற்றுத்திறனாளியான சாலை வியாபாரிக்கு வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த் திகேயன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (பொது) மகாராஜ், (தேர்தல்) ஜெயராமன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) பக்தவச்சலம், மாவட்ட சமூக நல அலுவலர் ரஞ்சிதாதேவி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் கல்பனா, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் புஸ்பாதேவி, மாவட்ட மாற்றுத்திறனாளி நலஅலுவலர் வசந்த ராம்குமார், துணை ஆட்சியர்கள் மற்றும் அனைத்து அரசுத்துறைகளின் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## போடியில் வெள்ளை நிற பட்டு உடுத்தி ஆற்றில் இறங்கி அருள்பாலித்த அழகர்



தேனி, மே.14-

தேனி மாவட்டம் போடியில் வெள்ளை நிற பட்டு உடுத்தி கொட்டகுடி ஆற்றில் இறங்கி அழகர் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். தேனி மாவட்டம் போடியில் அழகர் ஆற்றில் இறங்கும் வைபவம் நிகழ்ச்சி நடைபெற்றது. அழகர் வெள்ளை நிற பட்டு உடுத்தி கொட்டகுடி ஆற்றில் இறங்கி பக்தர்களுக்கு அருள் வழங்கினார். போடியில் அருள்மிகு ஸ்ரீநிவாச பெருமாள் கோவில் 1905ஆம் ஆண்டு ஜமீன் ஆட்சி காலத்தில் கட்டப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் அழகர் ஆற்றில் இறங்கும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்று வரும் நிலையில் இந்தாண்டு சித்திரை மாதம் சித்ரா பௌர்ணமி முழு நிலவு திங்கள்கிழமை அழகர் வெள்ளை நிறப் பட்டுத்தி கொட்டகுடி ஆற்றில் வேட் டைவராயன் படித்துறையில் பொன்குடையின் கீழ் அமர்ந்து ஆற்றில் இறங்கினார்.

பக்தர்கள் கையில் தீப்பந்தம் ஏந்தியும் சாட்டையால் அடித்தும் நேர்த்திக்கடனை செலுத்தினர். வழி நெடுகிலும் ஏராளமான பக்தர்கள் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர். ஆற்றில் இறங்கிய அழகர் நகரின் முக்கிய வீதி வழியாக சென்று பள்ளிவாசலில் அழகருக்கு வரவேற்பளித்து வெள்ளம் பூஜை செய்த பின் பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கினார். ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில் கால காலமாக இந்து முஸ்லிம் நட்புணர்வு வெளிப்படுத்தி வருகின்றனர். ஜமீன் பரம்பரையைச் சேர்ந்தவர் T.B.S.S.C.S. வடமலைராஜய பாண்டியன் தலைமையில் மற்றும் .குமரன் நாயுடு, நாயக்கர் மத்திய சங்கம் கௌரவத் தலைவர் முன்னிலையிலும் சிறப்பாக நடைபெற்று. ஸ்ரீனிவாசப் பெருமாள் சேவா அன்னதான அறக்கட்டளை சார்பாக மற்றும் நாயுடு நாயக்கர் மத்திய சங்கம் இளைஞர் அணிகளும் பக்த கோடிகளும் ஆன்மீக பெரியோர்களும் கலந்து கொண்டு அருள்மிகு ஸ்ரீனிவாச பெருமாள் அழகரின் திருவருளை பெற்றுச் சென்றனர்.

## சிபிஎஸ்இ 12ம் வகுப்பு தேர்வு முடிவுகள் வெளியீடு 88.39% மாணவர்கள் தேர்ச்சி

புதுடெல்லி, மே.14-

மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (சிபிஎஸ்இ), 12 ஆம் வகுப்பு தேர்வு முடிவுகளை இன்று அறிவித்தது. இந்த ஆண்டு மாணவர்களை விட மாணவிகள் 5 சதவீதம் அளவுக்கு அதிக தேர்ச்சி பெற்றுள்ளதாக தேர்வுக் கட்டுப்பாட்டாளர் சன்யம் பரத்வாஜ் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு 12 ஆம் வகுப்பு சிபிஎஸ்இ தேர்வுகளில் 88.39% மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். இது கடந்த ஆண்டை விட சற்று அதிகமாகும்.

மாணவர்களின் தேர்ச்சி சதவீதத்தைவிட மாணவிகள் 5% கூடுதல் தேர்ச்சி பெற்றுள்ளனர். 1.15 லட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் 90% க்கும் அதிகமான மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். 24,000 க்கும் மேற்பட்ட மாணவர்கள் 95% க்கும் அதிகமான மதிப்பெண்கள் பெற்றுள்ளனர்.

மாணவிகள் 91.64% தேர்ச்சி பெற்றுள்ளனர். மாணவர்களின் தேர்ச்சி விகிதம் 85.70% ஆகும்.

மொத்தம் 16,92,794 பேர் 12 ஆம் வகுப்பு சிபிஎஸ்இ தேர்வுகளை எழுதியிருந்தனர்.

இந்த ஆண்டு முதல் ஐந்து மண்டலங்களில் வெற்றி பெற்ற பகுதிகளில் விஜயவாடா 99.60% தேர்ச்சி சதவீதத்துடன் முன்னிலை வகித்துள்ளது. இதைத் தொடர்ந்து திருவனந்தபுரம் 99.32%, சென்னை 97.39%, பெங்களூரு 95.95%, டெல்லி மேற்கு 95.37% மதிப்பெண்களுடன் உள்ளன.





## தேசிய அளவிலான கிக் பாக்ஸிங் போட்டிக்கு தேர்வாகியுள்ள சிவகங்கை மாவட்ட கிக் பாக்ஸிங் வீரர்கள்

சிவகங்கை, மே.14-

சிவகங்கை மாவட்டம் தமிழ்நாடு கிக் பாக்ஸிங் சங்கம் சார்பில் தமிழ்நாடு கிக் பாக்ஸிங் சாம்பியன்ஷிப் 2025,மாநில அளவிலான கிக் பாக்ஸிங் போட்டி மே 9ஆம் தேதி முதல் 11ஆம் தேதி வரை செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூர் அடுத்த மேல கோட்டையூரில் தமிழ்நாடு உடற்கல்வி பல்கலைக்கழகத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது இதில் 25 மாவட்டங்களில் இருந்து 500க்கும் மேற்பட்ட வீரர்கள் மற்றும் வீராங்கனை பங்கேற்றனர், இதில் கேடட்ஸ், ஜூனியர்,சப் ஜூனியர், சீனியர் பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றன, சிவகங்கை மாவட்டத்திலிருந்து 19 வீரர்கள், சிவகங்கை மாவட்ட கிக் பாக்ஸிங் சங்கம் சார்பில் இப்போட்டியில் பங்கேற்றனர் இதில் 6 தங்கம், 5 வெள்ளி, 4 வெண்கல பதக்கங்களை வென்று சிவகங்கை வீரர்கள் சாதனை புரிந்துள்ளனர் பதக்கம் வென்ற வீரர்கள் வேலூரில் ஜூன் மாதம் ஒன்று முதல் நான்கு வரை நடக்கக்கூடிய மாநில கிக் பாக்ஸிங் பயிற்சி முகாமில் பங்கேற்று பின்னர் தேசியப் போட்டிக்கு செல்ல உள்ளனர், தேசிய போட் டியில் பதக்கம் வெல்லும் மாணவர்களுக்கு Form 2 சான்றிதழ்கள் வழங்கப்படும் என்றும் இது அவர்களின் கல்லூரி படிப்பிற்கு மிகவும் பக்கபலமாக இருக்கும் என்றும் மாணவர்களின் பயிற்சியாளர் மற்றும் சிவகங்கை மாவட்ட கிக் பாக்ஸிங் சங்க பொதுச் செயலாளர் ச.குணசீலன் தெருவித்தார், மேலும் இந்தப் போட்டியில் இடையமேலூர், கூட்டுறவுபட்டி, தமராக்கி ஆகிய ஊர்களில் உள்ள நான்கு அரசு பள்ளியைச் சார்ந்த பெண் வீராங்கனைகள் தேசிய போட்டிக்கு தேர்வாகி உள்ளனர் என்பது குறிப்பிடதக்கது என்று பயிற்சியாளர் சு. சித்ரா அவர்களை பள்ளியின் தலைமை ஆசிரியர்கள், மற்றும் பெற்றோர்கள் பாராட்டினர், இது சிவகங்கை மாவட்ட கிக் பாக்ஸிங் சங்கத்தின் 4 வருட தொடர் சாதனை என்றும் இந்த போட்டிகள் தமிழ்நாட்டு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தினாலும், இந்திய விளையாட்டு மேம்பாட்டு அனைத்து நாளும் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டு என்பது குறிப்பிடத்தக்கது என்று சிவகங்கை கிக் பாக்ஸிங் சங்கத் தலைவர் சதீஷ் மகிழ்ச்சியுடன் தெருவித்தார்.




## திருப்பூர் நெடுஞ்சாலை துறை அறிவிப்பு பலகைக்கு வர்ணம் பூசும் வேலைகள்

திருப்பூர், மே.14-

திருப்பூர் மாவட்டம் பெருமாநல்லூர் குன்னத்தூர் சாலை மற்றும் திருப்பூர் காங்கேயம் சாலையில் திருப்பூர் வடக்கு உட்கோட்டம் சார்பாக சாலை விபத்தினை தடுக்கும் விதத்தில் வளைவுகளில் அமைக்கப்பட்டுள்ள முன் எச்சரிக்கை பலகைகள் பொருத்தப்பட்டுள்ள கம்பங்களுக்கு வர்ணம் பூசும் பணியில் நெடுஞ் சாலைத்துறை பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். என உதவி கோட்ட பொறியாளர் விஜயகுமார் மற்றும் இளநிலை பொறியாளர் ராஜேஷ் தெரிவித்தனர்.





■ புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் மற்றும் புரட்சித்தலைவி அம்மா ஜெயலலிதா நல்லாசியுடன் மே 12 ல் 71 வது பிறந்தநாள் காணும் தமிழக முன்னாள் முதல்வர் கழக பொதுச்செயலாளர் சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் புரட்சித்தமிழர் எடப்பாடி கே. பழனிச்சாமி பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட கழக செயலாளர் சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் PR. செந்தில்நாதன் BSC., BL MLA., Ex. MP ஆலோசனைபேரில் சிவகங்கை மாவட்டம் குன்றக்குடி அருள்மிகு ஸ்ரீ சண்முகநாதப்பெருமான் திருக்கோவிலில் சிறப்பு பூஜையும் - அன்னதானமும் சிவகங்கை மாவட்ட கழக இளைஞரணி இணை செயலாளர் முனைவர் ஐயப்பன் Er. M. அர்ச்சணன் மற்றும் காரைக்குடி வழக்கறிஞர் அ.செந்தில்குமார் BSC., LLB., கழக வழக்கறிஞர், அஇஅதிமுக ஏற்ப்பாட்டில் நடைப்பற்றது உடன் கழக தொண்டர்கள், நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் கலந்துகொண்டனர்.





## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், எடப்பாடி, கே.பழனிச்சாமி, மே 12 ல் பிறந்த நாளை முன்னிட்டு அரசு மருத்துவமனையில் பிறந்த 20 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் பரிசு

மேடவாக்கம், மே.14-

சென்னை புறநகர் மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட மேடவாக்கம் ஆரம்ப சுகாதார அரசு மருத்துவமனையில் 12.05.2025 அன்று திங்கட்கிழமை மதியம் 12:30 மணிக்கு மே 12 ல் முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், எடப்பாடி, கே.பழனிச்சாமி அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மேடவாக்கம் ஆரம்ப சுகாதார அரசு மருத்துவமனையில் பிறந்த 20 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் பரிசாக வழங்கி பிறந்தநாளை மகிழ்ச்சியுடன் கொண் டாடினர். சென்னை புறநகர் மாவட்ட செயலாளர், கே.பி.கந்தன் அவர்களின் முன்னிலையில் அம்மா பேரவை துணைச் செயலாளர், பரங்கிமலை கிழக்கு ஒன்றிய செயலாளருமான, பெரும்பாக்கம், ராஜசேகர் தலைமை நிகழ்ச்சி ஏற்பாட்டில் பிறந்த 20 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் பரிசாக வழங்கி பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடினார். எடப்பாடி, கே.பழனிச்சாமி அவர்கள் நோய் நொடி இன்றி நீடுடி வாழ வேண் டும் என்று குழந்தையின் தாய்மார்கள் வாழ்த்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் மாநில, மாவட்ட, பகுதி, ஒன்றிய, வட்ட கழக, ஊராட்சி மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## எடப்பாடி யார் 71வது பிறந்த நாளை முன்னிட்டு அஸ்தினாபுரம் முத்துமாரியம்மன் கோவில் இருந்து 600 முருகருக்கு சிறப்பு பால் அபிஷேகம் செய்தனர்





அஸ்தினாபுரம், மே.14-

செங்கல்பட்டு மாவட்டம் அஸ்தினாபுரம் பகுதி சார்பில் கழகப் பொதுச் செயலாளர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சருமான புரட்சித் தமிழர் எடப்பாடி யார் 71வது பிறந்த நாளை முன்னிட்டு அஸ்தினாபுரம் முத்துமாரியம்மன் கோவில் இருந்து 600 பேர் கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் பால்குடம் எடுத்து வந்து அஸ்னாபுரம் சாலை வழியாக நவபாசனம் முருகருக்கு சிறப்பு பால் அபிஷேகம் செய்தனர் மேலும் சிறப்பு வழிபாடு நடைபெற்றது மாவட்ட கழகச் செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிட்லபாக்கம் ச.ராஜேந்திரன் தலைமையில் பகுதி கழகச் செயலாளர் முன்னாள் கவுன்சிலர் ஆர்.அருணாச்சலம் முன்னிலையில் 22வது வார்டு மாமன்ற உறுப்பினர் கிச்சா என்கின்ற கிருஷ்ணமூர்த்தி, வி.விஜய நாராயணன் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பகுதி நிர்வாகிகள் எம்.சீனிவாசன் வெங்கடேசன், வட்டக் கழகச் செயலாளர்கள் கராத்தே எஸ். ஸ்ரீதர், வெங்கடேசன், கோபால், தியாகராஜன், எம்.ஐ.டி.குமார், லோகநாதன், பத்மநாபன், கிரி என்கின்ற ராகவன், குணசேகரன், டி.ராஜேந்திரன் மற்றும் கேபிள் வெங்கடேசன், ஹேமாலினி சேகர், மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161